பொருளடக்கம்

❀

குகைவாசிகள் கொள்கைப் பாதை / 7

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு / 16

முன்னுரை / 21

1 இளைஞர்கள் ஒரு கண்ணோட்டம் / 27

முதல் வகையினர்:

சரியான, நேரான பாதையிலுள்ள இளைஞர்கள் / 27

- தவ்ஹீதையும் ஸுன்னாவையும் பற்றிப்பிடிப்பார்கள் / 28
- தொழுகையாளிகள் / 29
- ஸகாத் கொடுப்பார்கள் / 29
- நோன்பாளிகள் / 30
- ஹஜ்ஜு செய்வார்கள் / 30
- அல்லாஹ்வின் ஏகத்துவத்தை நம்புவார்கள் / 30
- நாத்திகக் கொள்கையை மறுப்பார்கள் / 31
- வானவர்களை நம்பிக்கை கொள்வார்கள் / 32
- வேதங்களை நம்பிக்கை கொள்வார்கள் / 32
- இறைத்தூதர்களை நம்பிக்கை கொள்வார்கள் / 32
- மறுமைநாளை நம்பிக்கை கொள்வார்கள் / 33
- விதியின் நன்மை, தீமையை நம்புவார்கள் / 33
- அனைத்திலும் அனைவருக்கும் நலன் நாடுவார்கள் / 34
- மார்க்கத்தில் தெளிவான அறிவுடன் அழைப்புப்பணி செய்வார்கள் / 34
- உண்மையாளர்களாக இருப்பார்கள் / 35
- சகோதரத்துவம் பேணுவார்கள் / 36
- அல்லாஹ்வுக்காக இயங்குவார்கள் / 37
- நல்ல குணங்களும் பண்புகளும் கொண்டவர்கள் / 37
- வேலைகளை நேர்த்தியாகச் செய்வார்கள் / 37
- ஈமானிய வாழ்வைப் பாதுகாத்துக்கொள்வார்கள் / 38

இரண்டாவது வகையினர்: வழிதவறிப்போன இளைஞர்கள் / 38
மூன்றாவது வகையினர்:
குழப்பத்தில் இருக்கும் இளைஞர்கள் / 40
2 இளமையின் வழிதவறல்களும்
அதன் வெவ்வேறு வடிவங்களும் / 42
வாலிபம் வழிதவறுவதற்கு முக்கியமான சில காரணங்கள் / 42
1. வேலை இல்லாமலிருப்பது / 42
2. பெரியவர்களை வெறுப்பது மற்றும்
அவர்களை விட்டும் விலகியிருப்பது / 43
3. தீயவர்களுடன் நட்புறவுகொள்வது / 44
4. அழிவைத் தரும் புத்தகங்களை வாசிப்பது,
காணொளிகளில் மூழ்கியிருப்பது / 46
5. இஸ்லாம் சுதந்திரத்தை முடக்கி வைக்கிறது,
ஆற்றல்களைப் புறக்கணிக்கிறது என
வாலிபர்களில் சிலர் நினைக்கின்றனர். / 47
கட்டுப்பாடற்ற சுதந்திரம் அனைவருக்குமே பிரச்சினை / 48
ஷரீஅத் என்பது மனித வாழ்வுக்குப் பொருத்தமானது / 49
வாழ்வின் நோக்கம் / 49
இஸ்லாம் சிந்திப்பதைத் தடுக்கவில்லை / 50
பாதிப்பில்லாத வாழ்வுக்கு இஸ்லாம் வழிகாட்டுகிறது / 51
3 வாலிபர்களின் உள்ளங்களில் ஏற்படும் ஊசலாட்டங்கள் / 54
வஸ்வாஸ் எனும் மன ஊசலாட்டம் / 54
மன ஊசலாட்டம் குறித்த நபிமொழிகள் / 55
நபிவழி சொல்லும் நான்கு மருந்துகள் / 57
4 விதியை ஏற்பதில் தடுமாற்றம் / 58
விதி குறித்த தர்க்கம் கூடாது / 58
செயல்படுவதுதான் நமது கடமை / 59
விதியும் இரண்டு சந்தேகங்களும் / 61
முதல் சந்தேகம் / 61
இரண்டாவது சந்தேகம் / 62
5 வாலிபம் பற்றிய நபிமொழிகள் சில / 66

1

இளைஞர்கள் ஒரு கண்ணோட்டம்

❀

பொதுவாக நமது இளைஞர்கள்[4] குறித்து நாம் நுணுக்கமாகக் கவனித்துப் பார்த்தால் அவர்களை மூன்று வகையாக்கலாம்.

1. சரியான, நேரான பாதையிலுள்ள இளைஞர்கள் (شَبَابٌ مُسْتَقِيْمٌ)
2. வழிதவறிப்போன இளைஞர்கள் (شَبَابٌ مُنْحَرِفٌ)
3. குழப்பத்தில் இருக்கும் இளைஞர்கள் (شَبَابٌ مُتَحَيِّرٌ بَيْنَ بَيْنَ)

முதல் வகையினர்

சரியான, நேரான பாதையிலுள்ள இளைஞர்கள்

(شَبَابٌ مُسْتَقِيْمٌ)

அல்லாஹ்வை நம்பிக்கை கொண்டு ஈமானுடன் இருக்கின்ற (மூஃமின்) இளைஞர்கள் என இவர்களைச் சொல்லலாம். இந்தச் சொல்தான் இவர்கள் நேர்வழியில் இருப்பவர்கள் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. இவர்கள் தங்கள் மார்க்கத்தை முழுமையாக நம்பிக்கை கொண்டவர்கள். அதனால் அதை நேசிக்கவும் செய்கிறார்கள். அதில் தன்னிறைவு அடைகிறார்கள்; மகிழ்ச்சி அடைகிறார்கள். தங்களுக்கு இஸ்லாம் கிடைத்தது தான் உண்மையில் வெற்றி, இலாபம் என்றும், அதை இழந்து

4 இந்த நூல் முழுவதும் இளைஞர்கள் என்று கூறப்படுவதில் ஆண்கள் மட்டுமின்றி, பெண்களும் அடங்குவார்கள். கருத்துக்கு ஏற்ப அது ஆண்களுக்கு மட்டுமானதா, பெண்களுக்கும் பொதுவானதா என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில், சில கடமைகள் ஆண்களுக்கு மட்டுமே பொருந்தும். சிலவோ பெண்களுக்கு மட்டுமே பொருந்தும். கொள்கைகள், வணக்கவழிபாடுகள், நல்லொழுக்கங்கள், நற்குணங்கள் போன்றவை இரண்டு சாராருக்கும் பொதுவானவை. (ப.கு.)

பக்கம் அழைப்பீராக. மேலும், அவர்களிடம் (விவாதிக்க நேரிட்டால்) நீர் கண்ணியமான அழகான முறையில் விவாதம் செய்வீராக. (குர்ஆன் 16:125)

இவர்கள்தாம் நன்மையை ஏவி தீமையைத் தடுப்பார்கள். ஏனெனில், இதன் மூலமாகத்தான் சமுதாயத்தில் மாற்றங்களும் முன்னேற்றங்களும் ஏற்பட முடியும் என்று அவர்கள் உறுதியாக நம்புவார்கள். அல்லாஹ் கூறுகின்றான்:

كُنْتُمْ خَيْرَ أُمَّةٍ أُخْرِجَتْ لِلنَّاسِ تَأْمُرُونَ بِالْمَعْرُوفِ وَتَنْهَوْنَ عَنِ الْمُنْكَرِ وَتُؤْمِنُونَ بِاللَّهِ

(முஸ்லிம்களே!) மனிதர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட சமுதாயங்களிலெல்லாம் மிக்க மேன்மையானவர்கள் நீங்கள் தாம். ஏனென்றால், நீங்கள் (மனிதர்களை) நன்மையான செயல்களைச் செய்யும்படி ஏவி, பாவமான செயல்களிலிருந்து (அவர்களைத்) தடுத்து, உண்மையாகவே அல்லாஹ்வை நம்பிக்கைகொள்கின்றீர்கள். (குர்ஆன் 3:110)

இவர்கள்தாம் தீமைகளைத் தடுப்பதின் வெவ்வேறு முறைகளையும் படித்தரங்களையும் அறிந்துவைத்திருப்பார்கள். அல்லாஹ்வின் தூதர் ﷺ கூறினார்கள்:

مَنْ رَأَى مِنْكُمْ مُنْكَرًا فَلْيُغَيِّرْهُ بِيَدِهِ فَإِنْ لَمْ يَسْتَطِعْ فَبِلِسَانِهِ فَإِنْ لَمْ يَسْتَطِعْ فَبِقَلْبِهِ وَذَلِكَ أَضْعَفُ الإِيمَانِ

உங்களில் யாராவது தீமையைக் கண்டால் தன் கையால் தடுக்கட்டும். அதற்கு முடியாமல் போனால் தன் நாவினால் தடுக்கட்டும். அதற்கும் முடியாவிட்டால் தம் இதயத்தால் தடுக்கட்டும். இதுதான் ஈமானில் மிகப் பலவீனமானதாகும். (அறிவிப்பு: அபூ ஸயீத் அல்குத்ரீ ؓ, முஸ்லிம் 49)

உண்மையாளர்களாக இருப்பார்கள்

இவர்கள் உண்மையைப் பேசுவார்கள். உண்மையை ஏற்றுக் கொள்வார்கள். ஏனெனில், உண்மை நன்மைக்கு வழிகாட்டும்; நன்மை சுவனத்திற்கு வழிகாட்டும்; ஒருவர் உண்மையைப் பேசி, எல்லாக் காலமும் அதைப் பின்பற்றி வந்தால், அவர்

ஈமானிய வாழ்வைப் பாதுகாத்துக்கொள்வார்கள்

இவர்கள் தங்கள் மார்க்கத்தையும், குணங்களையும், நடை முறைகளையும் பாதுகாத்துக் கொள்வார்கள். இவ்வாறே இந்த மார்க்கத்திற்கு முரண்பட்ட கடவுள் மறுப்பு, நாத்திகம், பாவம், குற்றம், கீழ்த்தரமான குணங்கள், தீய செயல்பாடுகள் போன்ற எல்லாவற்றைவிட்டும் தூரமாக இருப்பார்கள்.

இத்தகைய இளைஞர்கள்தாம் இந்தச் சமூதாயத்தின் பெரு மைக்குரிய மக்களாவார்கள். இந்தச் சமூதாயத்தின் வாழ்வுக்கும் உயர்வுக்கும் மார்க்கத்திற்கும் அடையாளமாக இருப்பவர்கள். இஸ்லாமின் பெயருக்கு வருகின்ற களங்கத்தையும், முஸ்லிம் களிடம் ஏற்பட்டுள்ள சீர்கேடுகளையும் சரிசெய்யக்கூடிய வர்களாக இவர்கள் இருப்பார்கள் என்று நாம் அல்லாஹ்விடம் ஆதரவு வைக்கிறோம். நேர்வழியில் நடந்தவர்களின் பாதை யைக் காட்டக்கூடிய வெளிச்சம் இவர்களிடம் உள்ளது. இம்மையிலும், மறுமையிலும் வெற்றி பெறுவதற்கான காரணமும் இவர்களிடம் உள்ளது. அல்லாஹ்வின் உதவியை நாடுகிறோம்.

இரண்டாவது வகையினர்
வழிதவறிப்போன இளைஞர்கள்

(شَبَابٌ مُنْحَرِفٌ)

இவர்கள் தங்கள் கொள்கையிலும் நடைமுறையிலும் வழி தவறிப் போய் சீரழிகிறவர்கள். தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்கிறவர்கள்; தரங்கெட்ட காரியங்களில் மூழ்கிக் கிடப் பவர்கள். பிறரிடமிருந்து சத்தியத்தைச் செவியுற்று ஏற்றுக் கொள்ளவும்மாட்டார்கள். தங்களிடமுள்ள கேடுகளை விட்டு விடவோ தடுத்துக்கொள்ளவோமாட்டார்கள். எல்லாவற்றிலும் 'நான்தான், என்னால்தான்' என்ற மனப்போக்கில் இருப்பார் கள். தாங்கள் படைக்கப்பட்டதே இந்த உலகத்திற்காகத் தான் என்பது போலவும், உலகமே தங்களுக்காகத்தான் படைக்கப்பட்டது என்பது போலவும் நினைத்துக்கொண்டி ருப்பார்கள். இஸ்லாமியச் சத்தியத் தூதுச்செய்திக்கு இசைந்து

2

இளமையின் வழிதவறல்களும் அதன் வெவ்வேறு வடிவங்களும்

❀

வாலிபம் வழிதவறிச் செல்வதற்கான காரணங்களும் அதற்குரிய பாதைகளும் பல்வேறு வகைகளில் உள்ளன. ஏனெனில், மனிதனின் வாலிபப் பயணம் என்பது பெரும்பாலும் அது உடலாலும் உள்ளத்தாலும் சிந்தனையாலும் இறக்கை கட்டிப் பறக்கும். காரணம், அது வளரும் பருவம். அதனால்தான் இந்தப் பருவத்தில் எந்தவொரு திருப்பமும், மாற்றமும் வெகு வேகமாக இருக்கும். ஆகவேதான் இந்தப் பயணத்தில் அந்த வாலிப மனதைக் கட்டிப்போட்டு, அதன் சண்டித்தனத்திற்குக் கடிவாளமிட்டு, அதை நேர்வழியை நோக்கி நுட்பமான முறையில் இழுத்துக்கொண்டு வருவதற்காகத் தயாராகுவதும் அதன் காரணங்களை அறிவதும் அவசியமான ஒன்று.

வாலிபம் வழிதவறுவதற்கு முக்கியமான சில காரணங்கள்

1. வேலை இல்லாமலிருப்பது

சும்மா இருப்பது என்பது நம் சிந்தனை, அறிவு, உடல் ஆரோக்கியம் ஆகியவற்றைக் கொல்லும் நோயாகும். மனித வாழ்க்கைக்கு அசைவும் அமலும் மிக அவசியமான ஒன்று. ஏனெனில், வேலை இல்லாமலிருக்கும்போதுதான் சிந்தனைகள் கெடும்; அறிவு மங்கும்; உடலசைவுகள் பலவீனமாகும்; மன ஊசலாட்டம் ஆதிக்கம் செலுத்தும்; தீய யோசனைகள் ஏற்படும். கட்டுப்பாடின்றி வேலையில்லாமல் சும்மா இருப்பதின் காரணமாகத்தான் உள்ளத்திலிருந்து பல்வேறு கெட்ட சிந்தனைகள் ஏற்படுகின்றன.

வின் அன்பை ஆழமாக ஊன்றச் செய்யும் புத்தகங்களை நமது வாலிபர்கள் வாசிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். அவை ஈமானையும் நற்செயல்களையும் உறுதிப்படுத்துபவையாக இருக்க வேண்டும்; இதற்குச் சற்று பொறுமையாகவும் இருக்க வேண்டும். ஏனெனில், இதற்கு முன்பு தீய புத்தகங்களை வாசிப்பதில் திளைத்துப் போயிருந்த இதயத்தை கடும் போராட்ட சிகிச்சைக்குப் பின்னர்தான் நல்வழிக்குக்கொண்டு வரமுடியும். காரணம், பயனுள்ள புத்தகங்களைத் திடீரென வாசிப்பதென்பது சடைவையும் சிரமத்தையும் ஏற்படுத்தும். அல்லாஹ்வை வணங்குபவன் எப்படி மனதுடன் சண்டை போடுவானோ அதே மனநிலைக்கு ஒப்பானதுதான் இது. வீணானவை, பொய்யானவை இவற்றைத்தான் மனம் எப்போதும் மறுக்காமல் ஏற்றுக்கொள்ளும்.

புத்தகங்களில் மிகவும் பயன் தரக்கூடிய புத்தகம் அல்லாஹ் வின் கண்ணியமிக்க வேதமாகும், இதையடுத்து இதற்காக கல்வியாளர்கள் எழுதியுள்ள சரியான வரலாற்றுச் செய்திகளையும், தெளிவான ஹதீஸ் ஆதாரங்களையும், அறிவார்ந்த தகவல்களையும் தாங்கிய திருக்குர்ஆன் விரிவுரை புத்தகங்களாகும். இதையடுத்து அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களின் ஸுன்னா எனும் நபிவழியைச் சொல்லிக் கொடுக்கும் வாழ்வியல் நடைமுறைகளின் ஹதீஸ் புத்தகங்களாகும். இதையடுத்து இவ்விரண்டிலிருந்தும் ஆய்வு செய்து பெறப்பட்ட ஃபிக்ஹ் எனும் மார்க்கச் சட்டங்களை உள்ளடக்கிய புத்தகங்கள் உட்பட இதர பல துறை சார்ந்த புத்தகங்களாகும்.

5. இஸ்லாம் சுதந்திரத்தை முடக்கி வைக்கிறது, ஆற்றல்களைப் புறக்கணிக்கிறது என வாலிபர்களில் சிலர் நினைக்கின்றனர்.

இப்படிப்பட்டவர்கள்தான் இஸ்லாமை விட்டும் விரண்டோடி விடுகின்றனர். மார்க்கம் என்பது இப்படித்தான் என்றெண்ணி தன்னோடு பலரையும் பின்னோக்கி இழுத்துச் சென்றுவிடுகின்றனர். இதுவே அவர்களது உயர்வுக்கும் முன்னேற்றத்திற்கும் தடையாகிவிடுகின்றது.

3

வாலிபர்களின் உள்ளங்களில் ஏற்படும் ஊசலாட்டங்கள்

❀

இறந்துபோன இதயத்தில்தான் மார்க்கத்திற்கு மூரணான எந்தவொரு மன அசைவும் மன ஊசலாட்டமும் ஏற்படாது. ஏனெனில், அது செத்துப்போன இதயம். பொதுவாக இதயத்தைக் கெடுக்க அதிகம் விரும்புகின்ற ஷைத்தான்கூட இதை விரும்பமாட்டான். இதனால்தான் இப்னு மஸ்ஊது அல்லது இப்னு அப்பாஸ் ﷺ அவர்களிடம், 'யூதர்கள் தங்களது தொழுகைகளில் எந்தவொரு மனஊசலாட்டத்தையும் அடைவதில்லையே?' என்று கேட்கப்பட்டபோது, 'ஆம் அவர்கள் அப்படி இருப்பது உண்மைதான். ஏனெனில், நாசமாகிப் போய்விட்ட இதயங்களில் ஷைத்தான் என்னதான் செய்வான்?' என்று கேட்டார்கள். (மஜ்மூஉ அல்ஃபதாவா, இப்னு தைமிய்யா 22/608)

வஸ்வாஸ் எனும் மன ஊசலாட்டம்

இதயம் உயிர்ப்புடன் இருந்தால் அங்கு ஈமான் இருக்கும். ஈமான் இருக்கும் இடத்தில்தான் ஷைத்தான் முட்டிமோதி சண்டைபோட்டுக்கொண்டிருப்பான். ஈமானுள்ள ஒருவர் அவனுக்குக் கட்டுப்பட்டுவிட்டால் அவன் தொடர்ந்து அவருடைய இதயத்தில் மார்க்கத்திற்கு மூற்றிலும் மூரணான, பேரழிவைத் தரும் வஸ்வாஸ் எனும் மன ஊசலாட்டத்தைச் செலுத்திக்கொண்டே இருப்பான். இதனால் அவர் தம்மூடைய இரட்சகன் விசயத்திலும், மார்க்கம் மற்றும் கொள்கை விசயத்திலும் பெரும் சந்தேகத்திற்குள் விழுந்துவிடுவார். இதயத்தில் சற்று பலவீனமான தோல்வி நிலையை அவர் அடைந்தால் ஷைத்தான் அவரை அவருடைய மார்க்கத்திலிருந்து வெளியே

4

விதியை ஏற்பதில் தடுமாற்றம்

❀

வாலிப வயதில் ஏற்படும் மாற்றங்களில் களா கத்ர் எனும் விதியை அறிவதில் ஏற்படும் தடுமாற்றமும், திகைப்பும் ஒன்றாகும். அடிப்படைக் கடமைகளில் இந்த விதியை ஈமான் கொள்வதும் ஒன்று. இதை ஈமான் கொள்ளாமல் அந்த ஈமான் முழுமை பெற்றதாக ஆகாது. ஏனெனில், இந்த வானத்திலும் பூமியிலும் என்னென்ன நடக்கும் என்பதை அந்த அல்லாஹ்தான் நன்கு அறிந்தவன். அவை எப்படி இயங்க வேண்டும் என்பதை நிர்ணயிப்பவனும் அவன்தான். அல்லாஹ் கூறுகின்றான்:

أَلَمْ تَعْلَمْ أَنَّ اللَّهَ يَعْلَمُ مَا فِي السَّمَاءِ وَالْأَرْضِ إِنَّ ذَلِكَ فِي كِتَابٍ إِنَّ ذَلِكَ عَلَى اللَّهِ يَسِيرٌ

(நபியே!) வானத்திலும் பூமியிலும் இருப்பவற்றை நிச்சயமாக அல்லாஹ் நன்கறிவான் என்பதை நீர் அறியவில்லையா? நிச்சயமாக இவை அனைத்தும் அவனுடைய (நிகழ்ச்சிக் குறிப்பாகிய 'லவ்ஹுல் மஹ்ஃபூள்') பதிவுப்புத்தகத்தில் இருக்கின்றன. நிச்சயமாக இது அல்லாஹ்வுக்கு மிக்க சுலபமானதே! (குர்ஆன் 22:70)

விதி குறித்த தர்க்கம் கூடாது

விதியின் விசயத்தில் சண்டையிடுவதையும் தர்க்கம் செய்வதையும் நபி ﷺ அவர்கள் தடை செய்துள்ளார்கள். அபூ ஹுறைறா ؓ அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது.

خَرَجَ عَلَيْنَا رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ وَنَحْنُ نَتَنَازَعُ فِي القَدَرِ فَغَضِبَ حَتَّى احْمَرَّ وَجْهُهُ، حَتَّى كَأَنَّمَا فُقِئَ فِي وَجْنَتَيْهِ الرُّمَّانُ، فَقَالَ: 'أَبِهَذَا أُمِرْتُمْ أَمْ بِهَذَا أُرْسِلْتُ

அவர்கள் எழுதப்பட்டவர்களாக இருப்பார்கள். அவ்வாறே நரகவாசிகளின் அமலைச் செய்தால்தான் நரகவாசிகளின் பட்டியலில் அவர்கள் எழுதப்பட்டவர்களாக இருப்பார்கள்.

அந்தந்த மனிதர்களின் சக்திக்கு ஏற்ப அவரவர்களின் அமல்கள் இருக்கும். குறிப்பிட்ட அமலை தேர்ந்தெடுப்பதும், அதைச் செய்வதற்கான சக்தியைப் பெறுவதும் அல்லாஹ்விடம் தான் இருக்கிறது என்று மனிதன் தனது மனதின் மூலம் அறிந்துகொள்கிறான். அவன் நாடினால்தான் செய்கிறான்; நாடாவிட்டால் விட்டுவிடுகிறான். சுதந்திரமாகத்தான் முடிவு எடுக்கிறான்.

ஒருவன் பயணம்செய்ய விரும்பினால் பயணம்செய்கிறான், விரும்பினால் பயணம் செய்யாமல் தங்கிவிடுகிறான். நெருப்பைப் பார்க்கிறான். அந்த இடத்தை விட்டும் விரண்டோடுகிறான். தனக்கு விருப்பமான ஒன்றை பார்க்கும்போது அதை நோக்கி நகர்கிறான். ஆக, இப்படித்தான் நன்மையும் தீமையும் அவனது விருப்பப்படி நடக்கிறது அல்லது விடப்படுகிறது.

விதியும் இரண்டு சந்தேகங்களும்

விதியின் விசயத்தில் இரண்டு வகையான சந்தேகங்கள் எழுப்பப்படுகின்றன.

முதல் சந்தேகம்

ஒருவன் தனது சுயவிருப்பப்படி அமல் செய்கின்றான் அல்லது அமலை சுயவிருப்பப்படி விடவும் செய்கிறான். இதில் அவனுக்கு எவ்வித நிர்ப்பந்தமும் அறவே இல்லை. எதார்த்த நிலை இப்படி இருக்க, இது கத்ர் எனும் இறைவிதிப்படிதான் நடக்கிறது என்று எப்படி ஈமான்கொள்ள முடியும் என்று சிலர் கேட்கிறார்கள்.

இதற்கான பதில்: ஒருவனின் செயலைப் பற்றி, அவனது அசைவைப் பற்றிச் சற்று நாம் சிந்திக்கத் தொடங்கினால் அதை நாம் இரண்டு வகையாகப் பெற்றுக்கொள்ளலாம்:

ஒன்று இராதத் (إِرَادَةٌ) - நாட்டம், அதாவது, ஒன்றைச் சுயமாக தேர்ந்தெடுப்பது.

5

வாலிபம் பற்றிய நபிமொழிகள் சில

❀

இதுவரை நாம் வாலிபம் பற்றியும் அதிலுள்ள பிரச்சினைகளைப் பற்றியும் கூறினோம். இப்போது வாலிபம் பற்றி வந்துள்ள நபிமொழிகளில் சிலவற்றை இங்கு நாம் கூற விரும்புகிறோம்.

إِنَّ اللَّهَ لَيَعْجَبُ مِنَ الشَّابِّ لَيْسَتْ لَهُ صَبْوَةٌ

1. வழிதவறுதல் இல்லாத வாலிபத்தைக் கண்டு நிச்சயமாக அல்லாஹ் ஆச்சரியப்படுகிறான். (அறிவிப்பு: உக்பா இப்னு ஆமிர் ﷺ, அஹ்மது 17409, அஸ்ஸஹீஹா 2843)

سَبْعَةٌ يُظِلُّهُمُ اللَّهُ فِي ظِلِّهِ يَوْمَ لاَ ظِلَّ إِلاَّ ظِلُّهُ الإِمَامُ الْعَادِلُ وَشَابٌّ نَشَأَ فِي عِبَادَةِ رَبِّهِ وَرَجُلٌ قَلْبُهُ مُعَلَّقٌ فِي الْمَسَاجِدِ وَرَجُلاَنِ تَحَابَّا فِي اللهِ اجْتَمَعَا عَلَيْهِ وَتَفَرَّقَا عَلَيْهِ وَرَجُلٌ طَلَبَتْهُ امْرَأَةٌ ذَاتُ مَنْصِبٍ وَجَمَالٍ فَقَالَ إِنِّي أَخَافُ اللَّهَ وَرَجُلٌ تَصَدَّقَ أَخْفَى حَتَّى لاَ تَعْلَمَ شِمَالُهُ مَا تُنْفِقُ يَمِينُهُ وَرَجُلٌ ذَكَرَ اللَّهَ خَالِيًا فَفَاضَتْ عَيْنَاهُ

2. ஏழு நபர்கள், அல்லாஹ்வின் நிழலைத் தவிர வேறு எங்குமே நிழலில்லாத நாளில் அல்லாஹ் அவர்களுக்குத் தன் நிழலைத் தருவான். நீதமான தலைவர், அல்லாஹ்வின் வணக்கத்தில் ஈடுபடும் வாலிபர், மஸ்ஜிதுகளின் தொடர்பில் தமது உள்ளத்தை வைத்திருப்பவர், நேசிப்பதையும் பிரிந்து செல்வதையும் அல்லாஹ்வுக்காகச் செய்யும் இருவர், அந்தஸ்துள்ள அழகான பெண்ணொருத்தி (தவறான முறையில் நடப்பதற்கு) அழைக்கும்போது, 'நான் அல்லாஹ்வுக்குப் பயப்படுகிறேன்' என்று சொன்னவர், தான் செலவு செய்வது தனது வலது கைக்குக்கூடத் தெரியாத முறையில் தர்மம் செய்பவர், அல்லாஹ்வை நினைத்து மனப்பூர்வமாகக் கண்ணீர் வடித்தவர். (அறிவிப்பு: அபூ ஹுறைறா ﷺ, புகாரீ 660, முஸ்லிம் 1031)